# தேர்வுப்பணிகளுக்கான கையேடு – மார்ச் 2020

# HANDBOOK ON EXAMINATION DUTIES & RESPONSIBILITIES – MARCH 2020

## அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## கல்லூரி சாலை

## சென்னை 600 006.

# CHAPTER- III

## வழித்தட அலுவலர்களுக்கான அறிவுரைகள்

## III . வழித்தட அலுவலர்களுக்கான அறிவுரைகள்

1. ஆய்வு அலுவலரிடமிருந்து ஆணை பெற்றவுடன் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வினாத்தாள் கட்டுக் காப்பு மையத்தின் வினாத்தாள் கட்டுக்காப்பாளரை சந்தித்து, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடத்திலுள்ள தேர்வு மையங்களின் தொலைவினையும் எந்த வழித்தடத்தில் தேர்வு மையங்களுக்கு செல்ல வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. தங்கள் வழித்தடத்தில் உள்ள அனைத்து தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்/துறை அலுவலர்களின் அலைபேசி எண்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. தங்கள் வழித்தடத்தில் உள்ள தேர்வு மையங்களை முன்னரே பார்வையிட்டு தேர்வு மைய தொலைவிற்கு ஏற்ப வினாத்தாள் கட்டுக்களை கொண்டு செல்வதற்கு ஏதுவாக ஆய்வு அலுவலரால் தயாரிக்கப்பட்ட வழித்தட வரைபடத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. வழித்தட வரைபடத்தினை அந்தந்த மைய முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர்களுக்கு தெரியப்படுத்தி தயாராக இருக்க செய்ய வேண்டும்.

5. வழித்தட அலுவலர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வு நாட்களின் போது ஆயுதம் தாங்கிய காவலர்கள் இன்றி வழித்தடப் பணியை மேற்கொள்ளக் கூடாது. வழித்தட அலுவலர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ளும் முன்னர் தமக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் நல்ல நிலையில் உள்ளதா என்பதையும் போதுமான எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

6. வழித்தட அலுவலர்கள் பயன்படுத்தும் வாகனத்தின் பின்பகுதியில் (Dickey) வினாத்தாள் கட்டுக்களையோ/ விடைத்தாள் கட்டுக்களையோ ஏற்றிச் செல்லுதல் கூடாது. மேலும் தாம் பயன்படுத்தும் வாகனத்தில் எளிதாக தீப்பற்றக்கூடிய (பெட்ரோல்/டீசல்) மற்றும் பிற பொருட்கள் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் .

7. வினாத்தாள் கட்டுக் காப்பாளரிடம் தங்கள் வழித்தடத்திற்கான தேர்வுமையங்களின் வினாத்தாட்களை ஒவ்வொரு தேர்வு நாளன்றும் பெற்று அதற்கான ஒப்புகை சீட்டை கட்டுக்காப்பாளரிடம் வழங்கவேண்டும். அதே போல தேர்வு மையத்திற்கு வினாத்தாட்களை வழங்கிய பிறகு வினாத்தாள் கட்டுக்காப்பாளருக்கு அலைபேசியில் வினாத்தாள் வழங்கிய விவரத்தினை தெரிவிக்க வேண்டும். தேர்வு மையத்திலிருந்து பிற்சேர்க்கை – 1ல் பெற்ற ஒப்புகை சீட்டுகளை வினாத்தாள் கட்டுக்காப்பாளரிடம் மறுநாள் வினாத்தாள் கட்டுக்களை பெறும்போது வழங்கவேண்டும்.

8. தங்கள் வழித்தடத்தின் கடைசி மையத்தில் வினாத்தாள் கட்டுக்களை ஒப்படைத்த பின் அம்மையத்திலேயே standing squad ஆக பணிபுரிய வேண்டும்.

9. வழித்தட அலுவலர்கள் தங்களது வழித்தடத்திலுள்ள தேர்வு மையங்களில் வினாத்தாள் கட்டுக்களை சம்பந்தப்பட்ட தேர்வு மையத்தில் முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், ஆகிய இருவர் முன்னிலையில் மட்டுமே ஒப்படைக்க வேண்டும். தேர்வு முடிவடைந்த பின் விடைத்தாள் கட்டுக்களை பெற்றுக் கொள்ளும்போது சம்பந்தப்பட்ட தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளர், துறை அலுவலர், பணியில் மூத்த நிலையான படை உறுப்பினர் (Standing Squad) மற்றும் சுழற்சி முறையில் தேர்வு மையத்திலுள்ள 25% அறைக்கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் முன்னிலையில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து விடைத்தாள் கட்டுக்களை பெறும்பொழுது பின்வரும் ஆவணங்களை சரிபார்த்து வாங்க வேண்டும். ஆவணங்கள் பெற்றமைக்கு ஒப்புகைப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

1. விடைத்தாள் கட்டுக்கள் **(தேர்வர் வகை**[+1 Regular / Arrear - +1 தேர்விற்கு மட்டும்]**/ மொழி / பாட / பயிற்று மொழிவாரியாக)** தனித்தனியாக கையொப்பமிட்டு வைக்கப்பட வேண்டும்.
2. CSD படிவங்கள் அடங்கிய துணி வேயப்பட்ட உறை (Cloth lined Cover) ( மொழி / பாட / பயிற்று மொழிவாரியாக )
3. தேர்விற்கு வருகை புரியாதோர் முகப்புச் சீட்டுகள் மற்றும் மொழிப் பாட விலக்கு அளிக்கப்பட்டோர் முகப்புச்சீட்டுகள் அடங்கிய துணி வேயப்பட்ட உறை (Cloth lined Cover)

11 வழித்தட அலுவலர்களுடன் செல்லும் ஆயுதம் தாங்கிய காவலரின் பெயர், காவலரின் எண் மற்றும் அலைபேசி எண் சார்ந்த விவரங்களை விடைத்தாள் சேகரிப்பு மையத்தின் தொடர்பு அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

12. பெறப்பட்ட 3 ஆவணங்களையும், விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் தொடர்பு அலுவலரிடம் (Liaison officer) பிற்சேர்க்கை – 5ல் பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும். அவர்களிடம் ஒப்படைத்தமைக்கு ஒப்புகை சீட்டு பெற்று வைத்துக் கொள்ள வேண்டும்.

13. வழித்தட அலுவலர் வழித்தட அலுவலருக்கான பணியுடன் கூடுதலாக கடைசி மையத்தில் Standing Squad –ஆக பணிபுரிவதாலும், அப்பணியாளர்களுக்கு வழித்தட அலுவலருக்கான உழைப்பூதியத்துடன் நிலையான படையினருக்கான (Standing Squad) உழைப்பூதியமும் சேர்த்து வழங்கப்படும்.

14. **வழித்தட அலுவலர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையங்களில் தேர்வு நடைபெறும் நாளன்று எந்தப் பாடத்தில், எந்தப் பயிற்று மொழியில் எத்தனை தேர்வர்கள் தேர்வெழுத உள்ளனர் என்பதை முன்னரே சம்பந்தப்பட்ட முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலரிடம் இருந்து பெற்று தெரிந்து கொண்டு, விடைத்தாட்கள் கட்டுக்களைச் சேகரிக்கும் நேரத்தில் குறிப்பிட்ட மையத்தில் குறிப்பிட்ட பாடம்/பயிற்றுமொழிக்கான விடைத்தாள் கட்டுக்கள் பெறப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். +1 தேர்வினைப் பொறுத்த வரையில் Regular / Arrear எதில்தேர்வெழுதி உள்ளனர் என்பதை முன்னரே தெரிந்து கொண்டு விடைத்தாள் கட்டுக்கள் பெறப்பட்டதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.**

**No.of CSD forms = No. of script bundles.**

# <u>வழித்தட அலுவலர் பணிகளுக்கான சரிபார்ப்புப்பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| **1.** | தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வினாத்தாள் கட்டுக்காப்பாளரை சந்தித்து தேர்வு மையங்களின் தொலைவு மற்றும் வழித்தடத்தைத் தெரிந்து கொண்டீர்களா? | |
| **2.** | ஆய்வு அலுவலரால் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழித்தடத்தில் உள்ள தேர்வு மையங்களை முன்னரே பார்வையிட்டு சம்பந்தப்பட்ட முதன்மை கண்காணிப்பாளர்கள் மற்றும் துறை அலுவலர்களிடம் தெரிவித்தீர்களா? | |
| **3** | தங்களுக்கு வாகன வசதி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர் நியமனம் முதன்மைக் கல்வி அலுவலரால் ஏற்பாடு செய்யப்பட்டதை உறுதி செய்து கொண்டீர்களா? | |
| **4** | தங்கள் வழித்தடத்தில் உள்ள அனைத்து முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர்களின் அலைபேசி / தொலைபேசி எண்களை பெற்றுவிட்டீர்களா? | |
| **5** | தேர்வு நாளன்று உரிய நேரத்தில் அந்தந்த மையங்களுக்குரிய வினாத்தாள் சிப்பங்களைப் பெற்று உரிய நேரத்தில் ஒப்படைத்தீர்களா? | |
| **6** | வழித்தடத்தின் கடைசி மையத்தில் Standing squad ஆக பணிபுரிந்தீர்களா? | |
| **7.** | வழித்தட அலுவலர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேர்வு மையங்களில் தேர்வு நடைபெறும் நாளன்று எந்த பாடத்திட்டத்தில், எந்த நடைமுறையில் எந்தப் பாடத்தில், எந்தப் பயிற்று மொழியில் தேர்வர்கள் தேர்வெழுத உள்ளனர் என்பதை முன்னரே தெரிந்து கொண்டு விடைத்தாட்கள் கட்டுக்களைச் சேகரிக்கும் நேரத்தில் குறிப்பிட்ட மையத்தில் குறிப்பிட்ட பாடம் / பயிற்றுமொழிக்கான விடைத்தாள் கட்டுக்கள் பெறப்படுவதை உறுதி செய்து கொண்டீர்களா? | |
| **8.** | தேர்வு முடிவுற்றவுடன் வழித்தடத்தின் கடைசி மையத்திலிருந்து முதல் மையம் வரை (In reverse order) ஒவ்வொரு தேர்வு மையத்திலிருந்தும் கீழ்க்காணும் ஆவணங்களை சரிபார்த்து பெற்றுக்கொண்டீர்களா?<br><br>1. விடைத்தாள் கட்டுகள்<br>2. CSD படிவம்<br>3. வருகைபுரியாதோர் மற்றும் மொழிப்பாட விலக்களிப்பட்டோர் முகப்புச்சீட்டுகள் | |
| **9.** | +1 தேர்வின்போது Regular / Arrear என விடைத்தாள் கட்டுக்கள் பிரித்து கட்டப்பட்டுள்ளதை சரிபார்த்து பெற்றுக்கொண்டீர்களா? | |
| **10.** | மேற்படி ஆவணங்களை விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் தொடர்பு அலுவலரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டதா? | |